# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1907/26 - 2015 මාර්තු මස 25 වැනි බදාදා - 2015.03.25

*1907/26 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் கல்யாணி தஹநாயக ஆகிய நான், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவத்தைப் பயன்படுத்தி 2007, சனவரி 9 ஆந் திகதிய 1479/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை, மேற்கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 107(2)(அ), பிரிவு 107(2)(ஆ) ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக அதன் அட்டவணையின் “பகுதி I” இற்கு உடனடுத்து இங்கு அட்டவணையில் தரப்பட்டுள்ள “பகுதி I அ” என்ற பகுதியை உட்புகுத்துவதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.

கே. தஹநாயக்க,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 2,
2015, மாச்சு 25.

**அட்டவணை**

“பகுதி I அ

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 107(2)(அ) ஆம் பிரிவின்கீழ், அச்சட்டத்தின் 104 மற்றும் 104அ பிரிவுகளின் நோக்கங்களுக்காக 2015, ஏப்பிறல் 1 ஆந் திகதிக்குப் பின்னர் ஆரம்பிக்கும் எந்தவொரு வரி மதிப்பாண்டுக்காகவும் இணைந்த தொழில் முயற்சிகளுடன் செய்யப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் சான்றிதழ் வழங்குதல் :

1. வரி செலுத்துநரின் பெயர் :

2. முகவரி :

3. வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) :

4. வரி மதிப்பாண்டு :

5. வரி செலுத்துபவர் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ள தொடர்புடைய கம்பனிகளின் பட்டியல் பின்வரும் விபரங்களுடன் :

(அ) தொடர்புடைய கம்பனியின் பெயர் :

(ஆ) 2013.08.12 ஆந் திகதிய 1823/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 7 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று இணைந்த தொழில் முயற்சியுடனான உறவின் தன்மை :

(இ) இணைந்த தொழில் முயற்சியினால் மேற்கொள்ளப்படும் வியாபாரம் தொடர்பான சுருக்க விபரம்.

6. வரிமதிக்கப்படுவர், இணைந்த தொழில் முயற்சிக்கு/கம்பனியிடமிருந்து பொருட்களை/பண்டங்களை ஒன்றுசேர்த்தலுக்கான/தயாரித்தலுக்கான/உற்பத்திக்கான மூலப்பொருட்களின் கொள்வனவில்/விற்பனையில் அல்லது வேறு ஏதேனும் வாங்கல்களில் ஈடுபட்டுள்ளாரா ? ஆம்/இல்லை

“ஆம்” எனின், ஒவ்வொரு இணைந்த தொழில் முயற்சி தொடர்பிலும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் அல்லது கொடுக்கல் வாங்கல் வகை தொடர்பிலும் பின்வரும் விபரங்களை வழங்கவும் ;

(அ) கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ளப்பட்ட இணைந்த தொழில் முயற்சியின் பெயர் மற்றும் முகவரி :

(ஆ) கொடுக்கல் வாங்கல் விபரம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட/விற்கப்பட்ட அளவு :

(இ) கொடுக்கல் வாங்கலில் செலுத்தப்பட்ட/பெறப்பட்ட அல்லது செலுத்த வேண்டிய/கிடைக்க வேண்டிய மொத்தத் தொகை :

(i) கணக்குகளின் நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க :

(ii) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தொடர்பில் வரி மதிக்கப்படுபவரினால் கணிக்கப்பட்ட தொகை :

(ஈ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகள் : (2013.08.12 ஆந் திகதிய 1823/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஒழுங்குவிதி 1 ஐப் பார்க்கவும்.)

7. வரிமதிக்கப்படுவர், இணைந்த தொழில் முயற்சியுடன் விற்கப்பட்ட/ முடிவுப் பொருட்களின் கொள்வனவு/விற்பனை தொடர்பான ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ளாரா ? ஆம்/இல்லை

“ஆம்” எனின், ஒவ்வொரு இணைந்த தொழில் முயற்சி தொடர்பிலும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் அல்லது கொடுக்கல் வாங்கல் வகை தொடர்பிலும் பின்வரும் விபரங்களை வழங்கவும் ;

(அ) கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ளப்பட்ட இணைந்த தொழில் முயற்சியின் பெயர் மற்றும் முகவரி ;

(ஆ) கொடுக்கல் வாங்கல் விபரம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட/விற்கப்பட்ட அளவு ;

(இ) கொடுக்கல் வாங்கலில் செலுத்தப்பட்ட/பெறப்பட்ட அல்லது செலுத்த வேண்டிய/கிடைக்க வேண்டிய மொத்தத் தொகை :

(i) கணக்குகளின் நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க :

(ii) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தொடர்பில் வரி மதிக்கப்படுபவரினால் கணிக்கப்பட்ட தொகை :

(ஈ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகள் : (2013.08.12 ஆந் திகதிய 1823/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஒழுங்குவிதி 1 ஐப் பார்க்கவும்.)

*8.* வரிமதிக்கப்படுவர், இணைந்த தொழில் முயற்சியுடன் தொட்டுணர முடியுமான ஏதேனும் அசையும்/ அசையா ஆதனங்களின் கொள்வனவு/ விற்பனை தொடர்பான ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ளாரா ? ஆம்/இல்லை

"ஆம்" எனின், ஒவ்வொரு இணைந்த தொழில் முயற்சி தொடர்பிலும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் அல்லது கொடுக்கல் வாங்கல் வகை தொடர்பிலும் பின்வரும் விபரங்களை வழங்கவும் ;

(அ) கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ளப்பட்ட இணைந்த தொழில் முயற்சியின் பெயர் மற்றும் முகவரி :

(ஆ) சொத்து விபரம் மற்றும் கொடுக்கல் வாங்கலின் தன்மை :

(இ) இக்கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புபட்ட ஒவ்வொரு அசையும்/அசையாச் சொத்து வகையினதும் அலகுகளின் எண்ணிக்கை :

(ஈ) ஒவ்வொரு கொள்வனவு/விற்பனை தொடர்பிலும் செலுத்தப்பட்ட/கிடைக்கப்பெற்ற அல்லது செலுத்தவேண்டிய/கிடைக்கவேண்டிய/கிடைக்க வேண்டிய தொகை அல்லது ஒவ்வொரு குத்தகை தொடர்பிலும் செலுத்திய/ கிடைக்கப்பெற்ற அல்லது செலுத்தவேண்டிய/ கிடைக்கவேண்டிய குத்தகை வாடகை ;

(i) நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க :

(ii) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தொடர்பில் வரி செலுத்துபவரினால் கணிக்கப்பட்ட தொகை :

(உ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகள் : *(2013.08.12 ஆந் திகதிய 1823/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஒழுங்குவிதி 1 ஐப் பார்க்கவும்.)*

*9.* வரி செலுத்துபவர், இணைந்த தொழில் முயற்சியுடன் தொட்டுணர முடியாத எப்படிச் செய்வது என்ற அறிவு, காப்புரிமைகள், பதிப்புரிமைகள், அனுமதிப்பத்திரங்கள் போன்ற ஏதேனும் ஆதனங்களின் கொள்வனவு/விற்பனை தொடர்பான கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ளாரா ? ஆம்/இல்லை

"ஆம்" எனின், ஒவ்வொரு இணைந்த தொழில் முயற்சி தொடர்பிலும் ஒவ்வொரு தொட்டுணர முடியாத ஆதன வகை தொடர்பிலும் பின்வரும் விபரங்களை வழங்கவும் ;

(அ) கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ளப்பட்ட இணைந்த தொழில் முயற்சியின் பெயர் மற்றும் முகவரி :

(ஆ) தொட்டுணர முடியாத சொத்துக்களின் விபரம் மற்றும் கொடுக்கல் வாங்கலின் தன்மை :

(இ) தொட்டுணர முடியாத ஒவ்வொரு ஆதன வகையினதும் கொள்வனவுக்காக/ விற்பனைக்காக/ பயன்பாட்டுக்காக செலுத்தப்பட்ட/ கிடைக்கப்பெற்ற அல்லது செலுத்த வேண்டிய/ கிடைக்க வேண்டிய தொகை :

(i) நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க :

(ii) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தொடர்பில் வரி செலுத்துபவரினால் கணிக்கப்பட்ட தொகை.

(ஈ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகள் : *(2013.08.12 ஆந் திகதிய 1823/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஒழுங்குவிதி 1 ஐப் பார்க்கவும்.)*

*10.* வரிமதிக்கப்படுவர், இணைந்த தொழில் முயற்சியுடன் நிதி, நிர்வாகம், தொழில்நுட்பம், வணிகம் போன்ற சேவைகள் தொடர்பான ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ளாரா ? ஆம்/இல்லை

"ஆம்" எனின், ஒவ்வொரு இணைந்த தொழில் முயற்சி தொடர்பிலும் ஒவ்வொரு சேவை வகை தொடர்பிலும் பின்வரும் விபரங்களை வழங்கவும் ;

(அ) கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ளப்பட்ட இணைந்த தொழில் முயற்சியின் பெயர் மற்றும் முகவரி :

(ஆ) இணைந்த தொழில் முயற்சிக்கு/கம்பனியிடமிருந்து பெறப்பட்ட/வழங்கப்பட்ட சேவைகள் பற்றிய விபரம் :

(இ) வழங்கப்பட்ட/பெறப்பட்ட சேவைகளுக்காகச் செலுத்தப்பட்ட/கிடைக்கப்பெற்ற அல்லது செலுத்த வேண்டிய/கிடைக்க வேண்டிய தொகை :

(i) நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க :

(ii) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தொடர்பில் வரி மதிக்கப்படுபவரினால் கணிக்கப்பட்ட தொகை :

(ஈ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகள் : (2013.08.12 ஆந் திகதிய 1823/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஒழுங்குவிதி 1 ஐப் பார்க்கவும்.)

11. வரிமதிக்கப்படுவர், இணைந்த தொழில் முயற்சியுடன் கடன்கள்/முற்பணங்கள் வழங்கும்/பெறும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ளாரா ? ஆம்/இல்லை

"ஆம்" எனின், ஒவ்வொரு இணைந்த தொழில் முயற்சி தொடர்பிலும் ஒவ்வொரு கடன்/ முற்பணம் தொடர்பிலும் பின்வரும் விபரங்களை வழங்கவும் :

(அ) கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ளப்பட்ட இணைந்த தொழில் முயற்சியின் பெயர் மற்றும் முகவரி ;

(ஆ) நிதியீட்ட ஒப்பந்தத்தின் தன்மை :

(இ) கடன்/முற்பணம் வழங்கப்பட்ட/கிடைக்கப்பெற்ற நாணயத் தொகை :

(ஈ) ஒவ்வொரு கடன்/முற்பணம் தொடர்பிலும் அறவிடப்பட்ட/செலுத்தப்பட்ட வட்டி வீதம் :

(உ) கொடுக்கல் வாங்கலில் செலுத்தப்பட்ட/ பெறப்பட்ட அல்லது செலுத்த வேண்டிய/ கிடைக்க வேண்டிய தொகை ;

(i) நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க :

(ii) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தொடர்பில் வரி செலுத்துபவரினால் கணிக்கப்பட்ட தொகை :

(ஊ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகள் : (2013.08.12 ஆந் திகதிய 1823/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஒழுங்குவிதி 1 ஐப் பார்க்கவும்.)

12. வரிமதிக்கப்படுவர், இணைந்த தொழில் முயற்சியொன்றுடன் அல்லது இணைந்த தொழில் முயற்சிகளுடன், எவரேனும் ஒருவருக்கு அல்லது அத்தகைய இணைந்த தொழில் முயற்சியொன்றுக்கு வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படவுள்ள பயனொன்றுடன், சேவையொன்றுடன் அல்லது வசதியொன்றுடன் தொடர்புடைய ஏதேனும் பங்களிப்பொன்றை, ஏதேனும் செலவு ஒன்றை அல்லது செலவினமொன்றை ஒதுக்கீடு செய்வதற்கான அல்லது குறித்து ஒதுக்குவதற்காக பரஸ்பர ஒப்பந்தமொன்றின் மூலம் அல்லது ஏற்பாடொன்றின் மூலம் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் ஒன்றில் ஈடுபட்டுள்ளாரா ? ஆம்/இல்லை

"ஆம்" எனின், ஒவ்வொரு ஒப்பந்தம்/ஏற்பாடு தொடர்பிலும் பின்வரும் தகவல்களை வழங்கவும் ;

(அ) பரஸ்பர ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு செய்துகொள்ளப்பட்ட இணைந்த தொழில் முயற்சியின் பெயர் மற்றும் முகவரி :

(ஆ) அத்தகைய ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு தொடர்பான விபரம் ;

(இ) அத்தகைய கொடுக்கல் வாங்கல் ஒவ்வொன்றிலும் செலுத்தப்பட்ட/பெறப்பட்ட அல்லது செலுத்த வேண்டிய/கிடைக்கவேண்டிய தொகை ;

(i) நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க :

(ii) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தொடர்பில் வரி மதிக்கப்படுபவரினால் கணிக்கப்பட்ட தொகை :

(ஈ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகள் : (2013.08.12 ஆந் திகதிய 1823/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஒழுங்குவிதி 1 ஐப் பார்க்கவும்.)

13. வரிமதிக்கப்படுவர், இணைந்த தொழில் முயற்சியுடன் மேற்குறித்த 6, 7, 8, 9, 10, 11 அல்லது 12 ஆம் பந்திகளில் விசேடமாக குறிப்பிடப்படாத வேறு ஏதேனும் கொடுக்கல்/வாங்கல்களில் ஈடுபட்டுள்ளாரா ? ஆம்/இல்லை

"ஆம்" எனின், ஒவ்வொரு இணைந்த தொழில் முயற்சி தொடர்பிலும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் பின்வரும் விபரங்களை வழங்கவும் ;

(அ) கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ளப்பட்ட இணைந்த தொழில் முயற்சியின் பெயர் மற்றும் முகவரி :

(ஆ) கொடுக்கல் வாங்கல் விபரம் ;

(இ) கொடுக்கல் வாங்கலில் செலுத்தப்பட்ட/ பெறப்பட்ட அல்லது செலுத்த வேண்டிய/ கிடைக்க வேண்டிய தொகை :

(i) நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க :

(ii) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தொடர்பில் வரி செலுத்துபவரினால் கணிக்கப்பட்ட தொகை.

(ஈ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகள் : (2013.08.12 ஆந் திகதிய 1823/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஒழுங்குவிதி 1 ஐப் பார்க்கவும்.)

14. நான்/நாங்கள், வரிமதிக்கப்படுவர் .......................... மாச்சு 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்தில் இணைந்த தொழில் முயற்சியுடன் செய்துகொண்ட கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய .................................................... (வரி செலுத்துபவரின் பெயர் மற்றும் முகவரி வரி செலுத்துநர் அடையாள இலக்கத்துடன்) கணக்குகளையும் பதிவுகளையும் பரிசீலித்தேன்/பரிசீலித்தோம்.

15. வரி செலுத்துபவரின் ஆவணங்களை நான்/நாங்கள் சோதனையிட்டபோது, இணைந்த தொழில் முயற்சியுடன் இது வரையில் செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட உரிய தகவல்கள் மற்றும் ஆவணங்களை வரி செலுத்துபவர் வைத்திருக்கிறார்/வைத்திருக்கவில்லை என்று நான்/நாங்கள் கருதுகின்றேன்/கருதுகின்றோம்.

16. 2013.08.12 ஆந் திகதிய 1823/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதி 9 இன்கீழ் பூர்த்திசெய்யப்பட வேண்டிய விபரங்கள் இச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளன. எனது/ எமது கருத்திற்கு இணங்கவும், எனது/எமது அறிவிற்கு உட்பட்ட வகையிலும், எனக்கு/எமக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு இணங்கவும், அனைத்து தகவல்களும் விபரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

----,
அங்கீகரிக்கப்பட்ட கணக்காளரின் கையொப்பம்.

பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

4-338

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.